
"There is one body and one spirit, just as you were called to the one hope of your calling"
(Ephesians 4:4)

Tamilnadu Bishops' Council




# தமிழக ஆயர் பேரவையின்
# கிறிஸ்தவ ஒன்றிப்புப் பணிக்குழு

## சனவரி 18 முதல் 25 முடிய – 2026

## கிறிஸ்தவ ஒன்றிப்பு வார
## திருவழிபாட்டுக் கையேடு

# தமிழக ஆயர் பேரவையின்
# கிறிஸ்தவ ஒன்றிப்புப் பணிக்குழு

## கிறிஸ்தவ ஒன்றிப்பு வார வழிபாட்டுக் கையேடு
2026 ஜனவரி – 18 முதல் 25 முடிய


**Rt. Rev. Dr. Lawrence Pius, D.D.,**
*Chairman*
Bishop's House,
NH 7, Gundalapatti Medu
Dharmapuiri - 636 701, Tamilnadu, India
Mob. : 0091 98848 88067
E-mail : dharmapuridiocese@gmail.com

**Rev. Fr. J. Benadict Barnabas**
*Secretary*
Nobili Campus
K. Pudur
Madurai - 625 007
Mob. : 0091 90800 83112
E-mail : benadictmdu@gmail.com

# கிறிஸ்தவ ஒன்றிப்புப் பாடல்

எத்துணை நன்று எத்துணை நன்று
அத்தனை பேரும் ஒன்றி வாழ்வது - எத்துணை நன்று - 2

ஒரு கொடிக் கிளையாய் நாமிருக்கின்றோம்
எத்துணை நன்று
அந்த ஒரே திருச்சபையில் நாமிருக்கின்றோம்
எத்துணை நன்று -2
ஒரே குடும்பமாய் நாமிருக்கின்றோம். . .
எத்துணை நன்று
இந்த ஒரே வித அழைப்பை நாம் பெற்றுக் கொண்டோம். . .
எத்துணை நன்று

புதியதோர் உலகம் கண்டிடுவோம்
எத்துணை நன்று
அதில் புதுமை வாழ்வை அடைந்திடுவோமே
எத்துணை நன்று -2
பிரிவினை எல்லாம் தீர்த்திடுவோமே
எத்துணை நன்று
இன்று இறைவனில் ஒன்றாய் இணைந்திடுவோமே
எத்துணை நன்று

***கிறிஸ்து இயேசுவுக்குள் எனக்கு மிகவும் பிரியமான கிறிஸ்தவ ஒன்றிப்பு மற்றும் பல்சமய உரையாடல் பணிக்குழுச் செயலர் தந்தையர்களே! பொதுநிலை சகோதர, சகோதரிகளே!***

“எல்லோரும் ஒன்றாயிருப்பார்களாக!” யோவான் 17:21 என்று ஒன்றிப்புக்காக மனதுருக்கத்துடன் தம் தந்தையிடம் மன்றாடிச் செபித்த இறை இயேசுவின் நாமத்தில் உங்கள் அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

இந்த ஒன்றிப்பு மற்றும் பல்சமயஉரையாடல் பணியில் நீங்கள் அனைவருமே உங்கள் மறைமாவட்ட அளவில் எடுத்துவரும் எண்ணற்ற முயற்சிகளுக்கும் செயல்பாடுகளுக்கும் எனது இதயப்பூர்வமான வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

குறிப்பாக ஒன்றிப்பு கிறிஸ்மஸ் மற்றும் சர்வசமயத்தாருடனும் இணைந்து எடுத்த எல்லா முயற்சிகளையும் பாராட்டுகின்றேன். அடுத்து நீங்கள் திட்டமிட்டிருக்கும் பொங்கல் விழாக்களும் வெற்றியடைய ஜெபிக்கின்றேன் வாழ்த்துகின்றேன்.

நமது மாநில பணிக்குழுவும் கடந்த டிசம்பர் 29ஆம் தேதி சென்னை புனித தாமஸ் மவுண்டில் உள்ள திருத்தல மலைக்கோயிலில், நிசேயா திருச்சங்கத்தின் 1700வது ஆண்டு நிறைவை அர்த்தமுள்ள வகையில் கொண்டாடும் முகமாக “TABOR – 2025” எனும் மாபெரும் கிறிஸ்தவ ஒன்றிப்பு உச்சி மாநாடானது எல்லா கிறிஸ்தவ சபை பேராயர்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், ஊழியர்கள் மற்றும் இறைமக்கள் பங்கேற்புடன், **“கிறிஸ்தவம்: நேற்று – இன்று– நாளை”** எனும் தலைப்பில் கலந்தாய்வுச் சிந்தனையரங்கமாகவும் ஜெப தியானக் கருத்தரங்காகவும் நடந்தேறியது. தொடர்ந்து கூட்டெருங்கியக்கத் திருப்பயணத்திற்காக திட்ட முன்மொழிவுகளும் தீர்மானங்களும், நம்பிக்கையுரைகளாக பதிவு செய்யப்பட்டன. இதில் ஈடுபாட்டுடன் உழைத்த அனைவரையும் வாழ்த்துகிறேன். பாராட்டுகின்றன். இது ஒரு தூண்டுதல் முயற்சி, வரும் 2033க்கு முன்பாக நாமும் நமது ஒவ்வொரு மண்டலங்களிலும் இத்தகைய “TABOR” கூடுகைகளை நமது பகுதியின் தேவையின் அடிப்படையில் தலைப்புகளை தேர்ந்து தெளிந்து நடத்தி ஒன்றிப்பையும் உரையாடலையும்

வலுப்படுத்துவோம், அடித்தள குழுக்களையும் எல்லா பங்குகளிலும், கிராமங்களிலும் அமைக்க முற்படுவோம். மேலும் வருகின்ற ஜனவரி 18ஆம் தேதி முதல் 25ஆம் தேதி முடிய **"கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம்" (Unity Octave - 2026).** கிறிஸ்தவ ஒற்றுமைக்கும் உறவாடலுக்கும் உகந்த வாரம். எனவே இந்த அருமையான வாய்ப்பை, பயன்படுத்தி எல்லா இடங்களில் நமது துறவற சபைகளின் ஒத்துழைப்போடும், பிற சகோதர சபைகளோடும் இணைந்து முன்னெடுக்க அன்புடன் வேண்டுகின்றேன்.

வருகின்ற சனவரி 26ஆம் தேதி நமது தமிழகமெங்கும் எல்லாச் சபையினரும் மாவட்ட வாரியாக பல்வேறு இடங்களில் கூடி காலை 09 மணி முதல் மாலை 04.00 மணி முடிய தொடர்ந்து 7 மணிநேரம் நமது தேசத்தின் தேர்தல் நேர்த்தியாக நடைபெற, நல்ல தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட இணைந்து செபிப்போம். இது குறித்து நமது சகோதர சபையினர் (Bless Tamilnadu Prayer Team) உங்களை தொடர்பு கொள்ளும் போது தேவையான ஒத்துழைப்பும் ஆதரவும் தர அன்புடன் வேண்டுகின்றேன். இந்நிகழ்வு குறித்து ஏற்கனவே மாநிலச் செயலர் பலமுறை உங்களுக்கு தெரிவித்துள்ளார். குழுவிலும் பகிர்ந்துள்ளார். மேலும் இந்த கிறிஸ்தவ ஒன்றிப்பு வார கையேட்டினை தமிழிலே மொழிபெயர்த்து சிறப்பாக வழங்கிய நமது அன்பு சகோதரர்கள் திருமிகு எரோணிமுஸ் (CCBI கருத்தாளர் குழு) மற்றும் திருமிகு பாப்பு வில்லியம் செபாஸ்டின், கும்பகோணம் மறைமாவட்டம் ஆகிய இருவருக்கும் என்னுடைய நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டொருங்கியத் திருப்பயணத்தில் அனைவரையும் இணைத்துச் செயல்படுவோம். உங்களுக்காக நானும் ஜெபிக்கின்றேன்.

இறையாசீர் உங்கள் அனைவரோடு இருப்பதாக!

இவண்

கிறிஸ்துவின் ஒன்றிப்புப் பணியில்

+Lawrence Pius

மேதகு ஆயர் லாரன்ஸ் பயஸ்

BISHOP LAWRENCE PIUS D.D. * DIOCESE OF DHARMAPURI *

# திருவழிபாடு

## ஒளியிலிருந்து ஒளி, ஒளிக்காக.

குரு : நம்முடைய ஆண்டவராகிய இயேசு நமக்கு கற்றுக்கொடுத்தஇறைவேண்டலைச்சொல்வோம்.

எல் : விண்ணுலகில்இருக்கின்றஎங்கள்தந்தையே...

குரு : உமது ஆட்சியும், வல்லமையும் , மாட்சியும் என்றென்றும் உமக்கு உரியதே

எல் : ஆமென்.

**வேண்டுதல் செபம் (திபா 72:15–18)**

வாசிப்பவர்1 : ஆண்டவருடைய பெயர் என்றென்றும் நிலைத்திருப்பதாக! கதிரவன் உள்ளவரையில் அவர் பெயர் நிலைப்பதாக!

வாசிப்பவர்2: அவர்மூலம்மனிதர்ஆசிபெறவிழைவாராக! எல்லா நாட்டினரும் அவரை நற்பேறு பெற்றவரென வாழ்த்துவராக!

எல்லாத் தலைமுறைகளும் அவரைப் புகழ்ந்து பாடும்.

வாசிப்பவர்1: ஆண்டவராகிய கடவுள், இஸ்ரயேலின் கடவுள் போற்றி! போற்றி! அவர் ஒருவரே வியத்தகு செயல்களைப் புரிகின்றார்!

மாட்சி பொருந்திய அவரது பெயர் என்றென்றும் புகழப்பெறுவதாக! அவரது மாட்சி உலகெல்லாம் நிறைந்திருப்பதாக!

எல் : ஆமென்.

வாசிப்பவர்2: மீண்டும் அமைதியுடன் ஆண்டவரை மன்றாடுவோம். எங்கள் மன்றாட்டுகளைக் கேட்டு, எங்களை உயிர்ப்பித்து எங்கள் மீது இரக்கம் காட்டும்.

குரு : தந்தைக்கும் மகனுக்கும் தூயஆவிக்கும் மகிமை உண்டாவதாக

தொடக்கத்தில இருந்தது போல் இப்பொழுதும்எப்பொழுதும்இருப்பதாக...

எல் : ஆமென்.

**ஒளியின் பாடல்:**

**வழிபாடு:**

வாசிப்பவர் : கிழக்கில் கதிரவன் உதயம் முதல் மேற்கில்கதிரவன்மறையும் வரை, உலகிலுள்ள கிறித்தவ மக்கள் அனைவரும்

தூய்மையில் ஆண்டவருடைய பெயரை அழைக்கும் இடமெல்லாம் - அவர்களின் மன்றாட்டுகளாலும் பரிந்துரைகளாலும் இறைவன் நம் மீது இரக்கம் காட்டுவாராக. பாவத்திலிருந்தும் உலகத்தின் சோதனைகளிலிருந்தும் நம்மை விடுவிக்கும்படி கடவுளிடம் மன்றாடுவோம். கடவுள் நம் இதயங்களின்

உறுதிப்பாடுகளையும் மன்றாட்டுகளையும் ஏற்றுக்கொண்டு, அவருடைய நம்பிக்கைகளுக்கும் அவருடைய கட்டளைகளுக்கும் தகுதியானவர்களாக நம்மை கருதுவாராக. அனைத்து வல்லமையுள்ள எங்கள் இறைவனாகிய ஆண்டவரே, எங்களை

உயிர்த்தெழச்செய்து எங்கள்மேல் இரக்கமாயிரும்.

எல் : ஆண்டவரே, எங்களை உயிர்த்தெழச்செய்து, எங்கள்மேல் இரக்கமாயிரும்.

*(காலை நேர வழிபாடு எனில்)*

வாசிப்பவர் : ஆண்டவரே, கதிரவன் உதிக்கும்இந்த காலையை பிறப்பித்த நீர், இந்த நாள் முழுவதும் அமைதியுடனும் நம்பிக்கையுடனும் எம்மை வழிநடத்த மன்றாடுகிறோம்.

அல்லது (மாலை நேர வழிபாடு எனில்)

வாசிப்பவர் : இந்த மாலையையும் வரவிருக்கும் இரவையும் அமைதியுடன் நம்பிக்கையுடனும் வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுவோம்.

எல் : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

வாசிப்பவர் : ஆண்டவரே, நீரே எமது பாதுகாவலராகவும் அமைதியின் தூதராகவும் இருக்க, இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

எல : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

வாசிப்பவர் : ஆண்டவரே, எங்கள் கீழ்படியாமையின்தவறுகளை மன்னிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

வாசிப்பவர் : திருச்சிலுவையின் மகத்தான மற்றும் வலிமைமிக்க ஆற்றல் நமக்கு உதவ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

வாசிப்பவர் : மீண்டும் ஒருமுறை, நமது உண்மையான மற்றும் தூய நம்பிக்கைக்காக, அனைவரும் ஒன்றாக, நாம் இறைவனிடம் மன்றாடுவோம்.

எல் : ஆண்டவரே, இரக்கமாயிரும்.

வாசிப்பவர் : அனைத்து வல்லமையுள்ள நமது கடவுளாகிய ஆண்டவரிடம், நம்அனைவரையும் ஒப்புக்கொடுப்போம்.

எல் : ஆண்டவரே, நாங்கள் உம்மிடம் எம்மை ஒப்புக்கொடுக்கிறோம்.

வாசிப்பவர் : எங்கள் கடவுளாகிய ஆண்டவரே, உமது மிகுந்த இரக்கத்தினால் எங்கள் மேல் இரக்கமாயிரும்.

எல் : ஆண்டவரே, இரக்கமாயிரும்.

ஆண்டவரே, இரக்கமாயிரும்.

ஆண்டவரே இருக்கமாயிரும்.

***மன்றாட்டு மற்றும் அமைதியைப் பகிர்ந்துகொள்ளல்:***

*(குரு பின்வரும் மன்றாட்டிற்காக கிழக்கு நோக்கி திரும்பி இரு கைகளை நீட்டி மன்றாடலாம்):*

குரு : இறைவா கிழக்கில் கதிரவன் உதயம் முதல் மேற்கில் கதிரவன் மறையும் வரை, ஆசிர் பெற்றவர் நீரே.

ஏனென்றால் நீரே அனைத்துலகின்அரசர், உமது பெயர் இவ்வுலகம் முழுவதும் போற்றப்படுகிறது. எமதுதிருப்பாடல்உமது செவிகளில் இனிமையாக ஒலிக்கட்டும். உமது நீதியிலிருந்து நீதி உதயமாகி, எமது பலவீனத்தின் மேல் பரவட்டும், உமது தூய நாமம் மகிமைப்படட்டும். உமது கட்டளைகளைக் கடைப்பிடிக்கவும், தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவிக்கும்,புகழும்மாட்சியும் இப்போதும் எப்போதும்என்றென்றும்இருப்பதாக.

எல் : ஆமென்.

*(குரு மக்களை நோக்கிச் சிலுவையின் அடையாளத்தை வரைந்து, கொண்டே...)*

ஆண்டவர் தரும் அமைதிஉங்களோடு இருப்பதாக!

எல் : உம் ஆன்மாவோடும் இருப்பதாக.

*(மக்கள் சமாதான வாழ்த்துக்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளலாம்.)*

வாசிப்பவர் : நாம்ஆண்டவரை வணங்குவோம்.

*(மக்கள் ஆண்டவரே உம்மை வணங்கி ஆராதிக்கிறோம் என சொல்ல வேண்டும்)*

(குரு மீண்டும் கிழக்கு நோக்கித் திரும்பி மன்றாடலாம்:

என்றும் வாழும் ஆண்டவரே, நீர் இந்த உலகத்தில் ஒளியாக உதித்தீர், எமது பாவத்தின் இருளிலிருந்து எம்மை ஒளிரச் செய்தீர். எல்லையற்றஇறைவா, நீர் எம்மிடத்திற்கு வந்தீர்,

உமது படைப்புகளின் மீது தூய ஆவியின் கொடைகளை ஏராளமாகப் பொழிந்தீர். தந்தைக்கும்மகனுக்கும்தூயஆவிக்கும், இப்பொழுதும், எப்போதும், என்றென்றும்மாட்சிஉண்டாகுக.

எல் : ஆமென்.

**திருவிவிலியம்வாசகம் :**

**முதல் வாசகம்:** எசாயா 58:6-11

கொடுமைத் தளைகளை அவிழ்ப்பதும், நுகத்தின் பிணையல்களை அறுப்பதும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவதும், எவ்வகைநுகத்தையும் உடைப்பதும் அன்றோ நான் தேர்ந்துகொள்ளும் நோன்பு!பசித்தோர்க்கு உங்கள் உணவைப் பகிர்ந்து கொடுப்பதும் தங்க இடமில்லா வறியோரை உங்கள் இல்லத்திற்கு அழைத்து வருவதும், உடையற்றோரைக் காணும்போது அவர்களுக்கு உடுக்கக் கொடுப்பதும் உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக் கொள்ளாதிருப்பதும் அன்றோ நான் விரும்பும் நோன்பு!அப்பொழுது உன் ஒளி விடியல் போல் எழும் விரைவில் உனக்கு நலமான வாழ்வு துளிர்க்கும் உன் நேர்மை உனக்கு முன் செல்லும் ஆண்டவரின் மாட்சி உனக்குப் பின்சென்று காக்கும்.அப்போது நீ ஆண்டவரை மன்றாடுவாய் அவர் உனக்குப் பதிலளிப்பார் நீ கூக்குரல் இடுவாய் அவர் ‘இதோ! நான்’ என மறுமொழி தருவார். உன்னிடையே இருக்கும் நுகத்தை அகற்றிவிட்டு, சுட்டிக்காட்டிக் குற்றஞ்சாட்டுவதையும் பொல்லாதன பேசுவதையும் நிறுத்திவிட்டு,பசித்திருப்போருக்காக உன்னையே கையளித்து, வறியோரின் தேவையை நிறைவு செய்வாயானால், இருள் நடுவே உன் ஒளி உதிக்கும் இருண்ட உன் நிலை நண்பகல் போல் ஆகும்.ஆண்டவர் தொடர்ந்து உன்னை வழிநடத்துவார் வறண்ட சூழலில் உனக்கு நிறைவளிப்பார் உன் எலும்புகளை வலிமையாக்குவார் நீயும் நீர் பாய்ந்த தோட்டம்போலும், ஒருபோதும் வற்றாத நீரூற்றுபோலும் இருப்பாய்.

ஆண்டவரின்அருள்வாக்கு

**இரண்டாம் வாசகம்:**

புனித பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் (4:1-13)

ஆண்டவர் பொருட்டு கைதியாக இருக்கும் நான் உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன் நீங்கள் பெற்றுக்கொண்ட அழைப்புக்கு ஏற்ப வாழுங்கள்.முழு மனத்தாழ்மையோடும் கனிவோடும் பொறுமையோடும் ஒருவரையொருவர் அன்புடன் தாங்கி, அமைதியுடன் இணைந்து வாழ்ந்து, தூய ஆவி அருளும் ஒருமைப்பாட்டைக் காத்துக்கொள்ள முழு முயற்சி செய்யுங்கள்.நீங்கள் ஒரே எதிர்நோக்கு கொண்டு வாழ அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். ஒரே எதிர்நோக்கு இருப்பது போல, உடலும் ஒன்றே தூய ஆவியும் ஒன்றே.அவ்வாறே, ஆண்டவர் ஒருவரே நாம் கொண்டுள்ள நம்பிக்கை ஒன்றே திருமுழுக்கு ஒன்றே.

எல்லாருக்கும் கடவுளும் தந்தையுமானவர் ஒருவரே அவர் எல்லாருக்கும் மேலானவர் எல்லார் மூலமாகவும் செயலாற்றுபவர் எல்லாருக்குள்ளும் இருப்பவர்.கிறிஸ்து கொடுக்க விரும்பும் அளவுக்கேற்ப நம் ஒவ்வொருவருக்கும் அருள்அளிக்கப்பட்டுள்ளது.ஆகையால்தான், □அவர் உயரே ஏறிச் சென்றார் அப்போது, சிறைப்பட்ட கைதிகளை இழுத்துச் சென்றார் மனிதருக்குப் பரிசுகளை வழங்கினார்□ என்று மறைநூல் கூறுகிறது.“ஏறிச் சென்றார்” என்பதனால் அதன் முன்பு மண்ணுலகின் கீழான பகுதிகளுக்கு அவர் இறங்கினார் என்று விளங்குகிறது அல்லவா?கீழே இறங்கியவர்தான் எங்கும் நிறைந்திருக்கும்படி எல்லா வானுலகங்களுக்கும் மேலாக ஏறிச் சென்றவர்.அவரே சிலரைத் திருத்தூதராகவும் சிலரை இறைவாக்கினராகவும், வேறு சிலரை நற்செய்தியாளர்களாகவும், ஆயர்களாகவும், போதகர்களாகவும் ஏற்படுத்தினார்.

திருத்தொண்டாற்ற இறைமக்களை ஆயத்தப்படுத்தவும், கிறிஸ்துவின் உடலைக் கட்டி எழுப்பவும் இவர்களை அவர் ஏற்படுத்தினார்.அதனால் நாம் எல்லாரும் இறை மகனைப் பற்றிய அறிவிலும் நம்பிக்கையிலும் ஒருமைப்பாட்டை அடைவோம். கிறிஸ்துவிடம் காணப்பட்ட நிறைவைப் பெறுமளவுக்கு நாம் முதிர்ச்சியடைவோம். - *ஆண்டவரின் அருள்வாக்கு*

அல்லேலூயா ( வாழ்த்தொலி):

அல்லேலூயா. அல்லேலூயா. .

ஏனென்றால், ஆண்டவரே வாழ்வின் ஊற்று உம்மிடமே உள்ளது

உமது ஒளியில் நாங்கள் அதைக் காண்கிறோம்.

அல்லேலூயா.

(குரு மக்களை நோக்கி சிலுவையின் அடையாளத்தை வரைந்து கொண்டே)

குரு : ஆண்டவர் உம்மோடு இருப்பாராக

எல் : உம் ஆன்மாவோடும் இருப்பாராக.

குரு : புனித யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்துவாசகம்.
(யோவா12: 31-36)

எல் : ஆண்டவரேமாட்சிஉமக்கே

இப்போதே இவ்வுலகு தீர்ப்புக்குள்ளாகிறது இவ்வுலகின் தலைவன் வெளியே துரத்தப்படுவான். நான் மண்ணிலிருந்து உயர்த்தப்படும் போது அனைவரையும் என்பால் ஈர்த்துக்கொள்வேன் என்றார். தாம் எவ்வாறு இறக்கப்போகிறார் என்பதைக் குறிப்பிட்டே இப்படிச் சொன்னார்.மக்கள் கூட்டத்தினர் அவரைப் பார்த்து, “மெசியா என்றும் நிலைத்திருப்பார் எனத் திருச்சட்ட நூலில் கூறியுள்ளதை நாங்கள் கேட்டிருக்கிறோம். அப்படியிருக்க, மானிட மகன் உயர்த்தப்பட வேண்டும் என நீர் எப்படிச் சொல்லலாம்? யார் இந்த மானிடமகன்? ” என்று கேட்டனர்.

இயேசு அவர்களிடம், “இன்னும் சிறிது காலமே ஒளி உங்களோடு இருக்கும். இருள் உங்கள்மேல் வெற்றி கொள்ளாதவாறு ஒளி உங்களோடு இருக்கும்போதே நடந்து செல்லுங்கள். இருளில் நடப்பவர் எங்கே செல்கிறார் என்பது அவருக்குத் தெரியாது.ஒளி உங்களோடு இருக்கும்போதே ஒளியை ஏற்றுக்கொள்ளுங்கள். அப்போது ஒளியைச் சார்ந்தவர்கள் ஆவீர்கள்” என்றார். இப்படிச் சொன்னபின் இயேசு அவர்களிடமிருந்து மறைவாகப் போய்விட்டார்.

- ஆண்டவரின் அருள்வாக்கு

மறையுரை

செபம்:

இரக்கமுள்ள ஆண்டவரே, அனைவருக்கும் இறைவனே, இழந்தவர்களுக்கு வழிகாட்டி நீர், இருளில் இருப்பவர்களுக்கு ஒளி நீர். எங்கள் கண்கள் உம்மை நோக்கித் திரும்புகிறது, எங்கள் வேண்டுதல்களைக் கேட்டருளும்.

உமது மாட்சியின் கதிரவன்ஒளிவீசி, கிழக்கிலிருந்து மேற்கு வரையிலும், வடக்கிலிருந்து தெற்கு வரையிலும் அனைவருக்கும் உயிரையும் ஒளியையும் தருவதாக. உமது காலைக் கதிர்கள் உமது வருகைக்காகக் காத்திருக்கும் எங்களை எழுப்புவதாக.

ஓ இயேசுவே, ஒளியிலிருந்து வரும் ஒளியே, உமது தூயமற்றும் விலைமதிப்பற்ற பெயரை வணங்க ஒன்றுகூடிய எங்களில் தங்குவதாக. உமது உயிர் அளிக்கும்ஒளி எங்களுள் ஒருவருக்கொருவர் ஆழமான அன்பை ஏற்படுத்துவதாக. உமது பேரொளி எங்களை மேலும் மேலும் வலுவான ஒற்றுமைக்குத் தூண்டுவதாக. உமது விண்ணகத்தோட்டத்தில் உள்ள பல்வேறு மலர்களைப் போல, உமது தெய்வீகஒளி எங்களை உறவில்மலரச்செய்வதாக.

அதனால், அனைவரும் ஒன்றாக, நாங்கள் எப்போதும் மகிழ்ச்சியுடன் உம்மையும், தந்தையையும், தூயஆவியையும் ஆராதித்து மாட்சிப்படுத்துவோமாக, இப்போதும், எப்போதும், என்றென்றும் உரித்தாகுக. ஆமென்.

*(நரேக்கின் புனித கிரிகோரியிலிருந்து தழுவி எடுக்கப்பட்டது)*

பதிலுரைப்பாடல்: (திருப்பாடல் 97)

(இறைமக்கள் இரு பிரிவாகபிரிந்து பின்வரும் திருப்பாடலைவாசிக்கிறார்கள் அல்லது பாடுகிறார்கள்

பல்லவி:

எம் கண்கள் உம்மை நோக்கித் திரும்பும், அனைத்துலகின் ஆண்டவரே எம்மேல் இரக்கம் கொண்டு எங்கள் வேண்டுதல்களைக் கேட்டருளும்.

முதல் பகுதியினர்:

ஆண்டவர் ஆட்சி செய்கின்றார் பூவுலகம் மகிழ்வதாக! திரளான தீவு நாடுகள் களிகூர்வனவாக!

2-ம் பகுதியினர்:

மேகமும் காரிருளும் அவரைச் சூழ்ந்துள்ளன் நீதியும் நேர்மையும் அவரது அரியணையின் அடித்தளம்.

எல் : எம் கண்கள் உம்மை நோக்கித் திரும்பும், அனைத்துலகின் ஆண்டவரே எம்மேல் இரக்கம்கொண்டு எங்கள் வேண்டுதல்களைக் கேட்டருளும்.

முதல் பகுதியினர்:

நெருப்பு அவர்முன் செல்கின்றது சுற்றிலுமுள்ள அவர்தம் எதிரிகளைச் சுட்டெரிக்கின்றது.

2-ம் பகுதியினர்:

அவர்தம் மின்னல்கள் பூவுலகை ஒளிர்விக்கின்றன் மண்ணுலகம் அதைக் கண்டு நடுங்குகின்றது.

எல் : எம் கண்கள் உம்மை நோக்கித் திரும்பும், அனைத்துலகின் ஆண்டவரே எம்மேல் இரக்கம்கொண்டு எங்கள் வேண்டுதல்களைக் கேட்டருளும்.

முதல்பகுதியினர்:

ஆண்டவர் முன்னிலையில், அனைத்துலகின் தலைவர் முன்னிலையில், மலைகள் மெழுகென உருகுகின்றன.

2ம் பகுதியினர் :

வானங்கள் அவரது நீதியை அறிவிக்கின்றன் அனைத்து மக்களினங்களும் அவரது மாட்சியைக் காண்கின்றன.

எல் : எம் கண்கள் உம்மை நோக்கித் திரும்பும், அனைத்துலகின் ஆண்டவரே எம்மேல் இரக்கம்கொண்டு எங்கள் வேண்டுதல்களைக் கேட்டருளும்.

முதல்பகுதியினர்:

உருவங்களை வழிபடுவோரும் சிலைகள் பற்றிப் பெருமையடித்துக் கொள்வோரும் வெட்கத்துக்கு உள்ளாவர் அனைத்துத் தெய்வங்களே! அவரைத் தாழ்ந்து பணியுங்கள்.

2-ம்பகுதியினர்:

ஆண்டவரே! உம் நீதித்தீர்ப்புகளை சீயோன் கேட்டு மகிழ்கின்றது யூதாவின் நகர்கள் களிகூர்கின்றன.

எல் : எம் கண்கள் உம்மை நோக்கித் திரும்பும், அனைத்துலகின் ஆண்டவரே எம்மேல் இரக்கம்கொண்டு எங்கள் வேண்டுதல்களைக் கேட்டருளும்.

முதல்பகுதியினர்:

ஏனெனில், ஆண்டவரே! உலகனைத்தையும் ஆளும் உன்னதர் நீர் தெய்வங்கள் அனைத்திற்கும் மேலானவர் நீரே!

2-ம்பகுதியினர்:

தீமையை வெறுப்போர்மீது ஆண்டவர் அன்புகூர்கின்றார். அவர்தம் பற்றுமிகு அடியார்களின் உயிரைப் பாதுகாக்கின்றார் பொல்லாரின் கையினின்று அவர்களை விடுவிக்கின்றார்.

எல் : எம் கண்கள் உம்மை நோக்கித் திரும்பும், அனைத்துலகின் ஆண்டவரே எம்மேல் இரக்கம்கொண்டு எங்கள் வேண்டுதல்களைக் கேட்டருளும்.

முதல்பகுதியினர்:

நேர்மையாளருக்கென ஒளியும் நேரிய உள்ளத்தோர்க்கென மகிழ்ச்சியும் விதைக்கப்பட்டுள்ளன.

2-ம்பகுதியினர்:

நேர்மையாளர்களே! ஆண்டவரில் களிகூருங்கள் அவரது தூய்மையை நினைந்து அவரைப் புகழுங்கள்.

எல் : தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவிக்கும் மாட்சிஉண்டாகுக.

துவக்கத்தில் இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. -ஆமென்.

**நம்பிக்கை மன்றாட்டு.** (பாடல்)

1. விண்ணையும் மண்ணையும் படைத்தவராம்
கடவுள் ஒருவர் இருக்கின்றார்
தந்தை, மகன், தூய ஆவியராய்
ஒன்றாய் வாழ்வோரை நம்புகிறேன்.

2. தூய ஆவியின் வல்லமையால்
இறைமகன் நமக்காய் மனிதரானார்
கன்னி மரியிடம் பிறந்தவராம்
இயேசுவை உறுதியாய் நம்புகிறேன்

3. பிலாத்துவின் ஆட்சியில் பாடுபட்டார்
சிலுவையில் இறந்து அடக்கப்பட்டார்
மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்
இறப்பின் மீதே வெற்றி கொண்டார்.

4. விண்ணகம் வாழும் தந்தையிடம்
அரியணைக் கொண்டு இருக்கின்றார்
உலகம் முடியும் காலத்திலே
நடுவராய் திரும்பவும் வந்திடுவார்

5. தூய ஆவியாரை நம்புகிறேன்
பாரினில் அவர் துணை வேண்டுகிறேன
பாவ மன்னிப்பில் தூய்மை பெற்று
பரிகார வாழ்வில் நிலைத்திடுவேன்.

6. திரு அவை உரைப்பதை நம்புகிறேன்
புனிதர்கள் உறவை நம்புகிறேன்
உடலின் உயிர்ப்பை நிலைவாழ்வை
உறுதியுடனே நம்புகிறேன் - ஆமென்

**இறுதி செபம்:**

குரு : மீண்டும், அமைதியுடன், ஆண்டவரிடம் மன்றாடுவோம்.

தம்முடைய படைப்புகள் மீது தம்முடைய ஒளியைப் ஒளிரச் செய்த எல்லாம்வல்ல இறைவனை ஆராதிப்போமாக. இப்போது,

தமது பெயரை பாடல் வழி மாட்சிப்படுத்துபவர்கள் மீது அவரது அளவுகடந்த இரக்கத்தை அவர் மீண்டும் ஒருமுறை ஒளிரச் செய்வாராக.. எல்லாம்வல்ல ஆண்டவராகிய எம் இறைவனே, எம்மை உயிர்ப்பித்து எம்மேல் இரக்கம் கொள்ளும்.

எல் : ஆண்டவரே, இரக்கமாயிரும். ஆண்டவரே, இரக்கமாயிரும்.

ஆண்டவரே, இரக்கமாயிரும்.

குரு : இரக்கமும் எல்லாம்வல்லஆண்டவராகியஇயேசு கிறிஸ்துவே,இறைமகனே!

நீரே உண்மையான ஒளி, பாவ இருளை அகற்றி, உம்முடைய நிலையான அரசின் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் எங்கள் இதயங்களில் ஒளிரச் செய்தவர் நீரே.

எல் : ஆண்டவரே, இரக்கமாயிரும்.

குரு : அன்பின் இறைவா, உலகெங்கிலும் உள்ள உமது உண்மையான பிள்ளைகள் அனைவரின் வேண்டுதல்களையும் ஏற்றுக்கொள்ளும், அவர்கள் ஒரே மனதோடும், ஒரே குரலோடும், ஒரே இதயத்தோடும் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறார்கள். உமது அன்புச் சீடரான புனித யோவான் வழியாக நாங்கள் உமது ஒளியில் நடந்தால், ஒருவரோடொருவர் ஒன்றினைக்கப்படுவோம் என்றும், உம்முடைய விலைமதிப்பற்ற இரத்தம் எம்மை எல்லா பாவங்களிலிருந்தும் தூய்மையாக்கும் என்றும் நீர் வாக்குறுதி அளித்துள்ளீர்.

ஓ மீட்பரே, அத்தகையபுனிதமானஒன்றிப்பை எமக்குத்தாரும்!

எல் : ஆண்டவரே, இரக்கமாயிரும்.

குரு : அன்பான ஆண்டவரே, எங்களுக்கு அமைதியை அருளும், மக்களிடையே அமைதியின்மை மற்றும் வன்முறையின் கசையடியை இப்புவியின் முகத்திலிருந்து நீக்கும். போரிடும் அனைவரின் இரதயங்களையும் மாற்றுவீராக, போரால் பாதிக்கப்பட்ட அனைவரின் காயங்களையும் ஆற்றுவீராக. போர்க் கைதிகள் அனைவருக்கும் ஆறுதல் அளித்து, அவர்களை விரைவில் அவர்களின் இல்லத்தில் சேர்த்தருளும். நமது

உலகின் அனைத்து இருள்சூழ்ந்த இடங்களிலும் உமது அன்பின் ஒளி பரவட்டும், மேலும் அனைத்து மக்களும் நீதியுடன் அமைதியாக வாழும் நாளைத் தாரும்.

எல் : ஆண்டவரே இரக்கமாயிரும்.

குரு : ஓ எங்கள் அடைக்கலமும் இருப்பிடமுமாகிய ஆண்டவராகிய இயேசுவே, உலகம் முழுவதும் உள்ள அகதிகளை இரக்கத்துடன் கண்ணோக்கும். அவர்கள் புலம்பெயர்வு மற்றும் தங்கள் வீடுகளை இழந்த வேதனையை அனுபவிக்கிறார்கள். விருந்தோம்பல் மற்றும் பரிவுள்ள உதவியின் அடையாளங்கள் மூலம் அவர்களுடனும் ஒருவருக்கொருவர் எங்கள் ஒற்றுமையை வெளிப்படுத்த எங்களைத் தூண்டும்.

எல் : ஆண்டவரே, இரக்கமாயிரும்.

குரு : எங்கள் மீட்பராகிய கிறிஸ்துவே, ஆர்மீனியா மக்களுக்காகவும், அர்ட்சேக் மக்களுக்காகவும், உலகம் முழுவதும் உள்ள அவர்களது உறவினர்களுக்காகவும் நாங்கள் மன்றாடுகிறோம், அவர்கள் நீண்ட காலத்திற்கு முன்பு திருத்தூதர் ததேயுஸின் போதனை மற்றும் புனித கிரிகோரியின் அற்புத சாட்சியின் மூலம் உமது ஒளியை நோக்கித் திரும்பினர்கள்.

எல் : ஆண்டவரே, இரக்கமாயிரும்.

குரு : உமது நீதி மற்றும் ஞானத்தின் ஒளியை அனைத்து உயிரிகள் மீதும் ஒளிர்ச் செய்யும். எங்களை ஒளியின் குழந்தைகளாகவும், பகலின் குழந்தைகளாகவும் மாற்றும், இதனால் நாங்கள் எப்போதும் எமது வாழ்வை இறையச்சத்துடன் வாழ்ந்து, உலகம் முழுவதும் உமது உயிரளிக்கும் ஒளிக்கு தகுதியானவர்களாக மாறுவோமாக.

எல் : ஆண்டவரே, இரக்கமாயிரும்.

குரு : ஏனெனில் நீர் எங்கள் மீட்பர் , உமக்கே மாட்சியும், ஆட்சியும், புகழும் உண்டாவதாக, இப்பொழுதும், எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக.

எல் : ஆமென்.

பாடல் :

குரு : எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து துதிக்கப்படுவாராக

எல் : ஆமென்.

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே!....

குரு : நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரக்கமும், இறைவனின் அன்பும் , தூய ஆவியின் நட்புறவும் நம் அனைவரோடும் இருப்பதாக....

எல் : ஆமென்.

# கிறிஸ்தவ ஒற்றுமை ஞாயிறு
## ஜனவரி 18, 2026

**திருப்பலிக்கான முன்னுரை:**

கிறிஸ்துவில் அன்பான சகோதர சகோதரிகளே, இன்றயை நாளை இந்தியத் திருச்சபை, கிறிஸ்தவ ஒற்றுமைக்கான ஞாயிறாகக் கொண்டாடுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 18 முதல் 25 வரை உள்ள எட்டு நாட்களும் கிறித்தவ சபைகளின் ஒற்றுமைக்கான செபம் மற்றும் செயல்பாட்டுக்கான வாரம் என்று அழைக்கப்படுகிறது. இந்நாட்களில் நாம், மீண்டும் ஒருமுறை, திருச்சபைகளின் ஒற்றுமைப் பணிகளுக்கான நமது உறுதிப்பாட்டைப் புதுப்பிக்க அழைக்கப்படுகிறோம், யோவான் 17:21ல் குறிப்பிடப்பட்டுள்ளது போல **'அவர்கள் அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும்... என்னை நீர்தான் அனுப்பினீர் என்று உலகம் நம்ப வேண்டும்'** என்று நமதாண்டவர் இயேசு கிறிஸ்து, தம்மை நம்பும் அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று ஜெபித்தார் என்பதை நாம் அறிவோம்.

புனித பவுல் எபேசியருக்கு எழுதிய திரு முகம் 4:4ல், குறிப்பிட்டுள்ள **"உங்களுக்கு ஒரே உடலும் ஒரே ஆவியும் இருப்பது போல நீங்களும் ஒரே நம்பிக்கை ஒரே எதிர்நோக்கு கொண்டு வாழ அழைக்கப் பட்டிக்கிறீர்கள்"** என்பதே இந்த ஆண்டிற்கான கிறித்தவ சபைகளின் ஒன்றிப்புக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட கருப்பொருளாக உள்ளது.

கிறித்தவ சபைகளின் ஒற்றுமை என்பது வெறும் மனித குலத்தின் இலட்சியம் அல்ல. மாறாக அது ஒரு ஆன்மீக அழைப்பு மற்றும் தெய்வீகக் கொடை என்பதை இந்த வார்த்தைகள் நமக்கு நினைவூட்டுகின்றன. உடலின் பல்வேறு உறுப்புகளை ஒரே உயிர் ஒன்றினைப்பது போல கிறிஸ்து எனும் உடலின் பல்வேறு உறுப்பினர்களை ஒரே உயிருள்ள ஒற்றுமையாக ஒன்றினைப்பது பரிசுத்த ஆவியானவரே.

உலக கிறித்தவ சபைகளின் அமைப்பு (World council of Churchs ) மற்றும் கிறிஸ்தவ ஒற்றுமையை ஊக்குவிப்பதற்கான அமைப்பு (Dicastery tor Promoting Christian unity) போன்ற அமைப்புளின் கூட்டுணர்வுடன் ஆர்மீனிய அப்போஸ்தலிக்க திருச்சபையின் கிறித்தவ சபைகளின் உறவுகள் துறையால் (Church Relations Department of the Armenian Apostolic Church) இந்த ஆண்டிற்காக. தயாரிக்கப்பட்ட செபங்களும் உள்ளொளி தியான செய்திகளும், நமது புதிய மனமாற்றத்தின் பயணத்திற்கும்,

உரையாடல்களுக்கும், மற்றும் சாட்சிய வாழ்வு பரிமாற்றத்திற்கும் நமக்கு அழைப்பு விடுக்கின்றன.

பல்வேறு மத நம்பிக்கைகள், பல்வேறு கலாச்சாரங்கள், மற்றும் பல்வேறு மொழிகளால் இந்த உலகம் சூழ்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் உள்ள இந்த பன்முகத்தன்மையில் இந்திய கிறித்தவ சமூகங்கள் ஒற்றுமைக்கு சாட்சியமளிக்க தனித்துவம் பெற்றுள்ளன. நம்மிடைய நிலவும் வேறுபாடுகளை அழிப்பது என்பதல்ல மாறாக அவற்றை நல்லிணக்கமாக மாற்றுவதே நமது அழைப்பாகவும், உலகை படைத்த இறைவனின் படைப்பாற்றலின் பிரதிபலிப்பாக உள்ள அந்த பன்முகத் தன்மையைக் கொண்டாடுவதே நம் அனைவரின் கண்ணியமாகவும் விளங்குகிறது.

‘நாட்டு மக்களின் நீதி மற்றும் அமைதிக்காக ஒன்றாக பணி புரியவும், நாட்டில் நிலவும் பொருளாதார சமத்துவமின்மை, சாதிய ஏற்றத்தாழ்வுகள், மற்றும் மத துவேச பதட்டங்களால் பொறிக்கப்பட்டுள்ள நம் நாட்டு சமூகத்திற்கு கிறித்தவ ஒற்றுமையின் சக்தி முன்னெப்பதையும் விட இன்று அதிகமாக, அழுத்தமாகத் தேவைப்படுகிறது. நாம் கிறிஸ்துவில் ஒன்றாக இருக்கும் போது அவரின் அன்பு மற்றும் இரக்கத்தின் நம்பிக்கைக்குரிய சாட்சியாளர்களாக மாறுகின்றோம்.

இந்த ஞாயிறு வழிபாட்டுக்கான வார்த்தை வழிபாடு ஒற்றுமைக்கான கடவுளின் அழைப்பு நம் மீட்புக்கான அவரது திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது.

அவர் தம்முடைய ஊழியர்களை ஒளியாக இருக்க அழைக்கிறார், பரிசுத்தப்படுத்த தம்முடைய ஆவியை அனுப்புகிறார், பாவத்ததிலிருந்தும் பிரிவினைகளிலிருந்தும் நம்மை காக்கும் ஆட்டுக்குட்டியாக இயேசுவை வெளிப்படுத்துகிறார். எனவே, நன்றியுள்ள இதயங்களுடன் இந்த நற்கருணையைக் கொண்டாடுவோம், ஆண்டர் இயேசுவை நம்பும் அனைவரையும் ஒன்றிணைத்து, நம் நாட்டில் ஒற்றுமை மற்றும் அமைதிக்கான கருவிகளாக அவர்களை மாற்றும்படி நம் ஆண்டவர் இயேசுவை மன்றாடி கேட்டுக்கொள்வோம்.

**மன்னிப்பு மன்றாட்டு:**

**குரு:** அன்புள்ள சகோதரிகளே, சகோதரர்களே, எக்குமெனிசம் எனப்படும் கிறிஸ்தவ சபைகளின் ஒன்றிப்பு ஞாயிற்றுக்கிழமையான இன்று இந்த நற்கருணையைக் கொண்டாட நாம் கூடிவரும்போது, நமது பாவங்களை ஏற்று ஒப்புக்கொடுப்போம் - குறிப்பாக கிறிஸ்துவின் உடலைப் புண்படுத்தக் கூடிய நம்மிடையே நிலவும் பிரிவினைகள், பிறர் மீது நாம் கொண்டுள்ள தவறான முன்தீர்மானங்கள் மற்றும் அன்பின்மை போன்ற பாவங்களை ஏற்று

மனம் வருந்துவோம். கடவுளின் இரக்கத்தையும் நல்லிணக்கத்திற்கான அருளையும் மன்றாடுவோம்.

கடவுளாகிய இயேசுவே, உம்மை நம்பும் அனைவரையும் ஒரே மந்தையாகச் சேர்க்க வந்தீர் ஆண்டவரே இருக்கமாயிரும்.

கிறிஸ்து இயேசுவே, நீரும் பிதாவும் ஒன்றாக இருப்பது போல, உம்முடைய சீடர்கள் அனைவரும் ஒன்றாக இருக்கும்படி நீர் செபித்தீர் கிறிஸ்துவே இருக்கமாயிரும்.

கர்த்தராகிய இயேசுவே, எங்களை மன்னித்து உமது அன்பிற்கு நாங்கள் ஆட்பட்டு ஒன்றாக சாட்சி கொடுக்கவும் நீர் எங்களை அழைக்கின்றீர் ஆண்டவரே இருக்கமாயிரும்.

எல்லாம் வல்ல கடவுள் நம்மீது கருணைகூர்ந்து, நம் பாவங்களை மன்னித்து, நம்மை நித்திய வாழ்வுக்கு அழைத்து செல்வாராக...

இறைமக்கள்: ஆமென்.

**வாசக முன்னுரை:**

*(பொதுக்காலத்தில் 2வது ஞாயிற்றுக்கிழமைக்கான இன்றைய வாசகங்களே பயன்படுத்தப்பட்டுள்ளன.)*

**முதல் வாசகம்:** எசாயா 49:3,5-6

கடவுளின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியர் இஸ்ரவேலை மீட்டெடுப்பதற்கு மட்டுமல்ல, தேசங்களுக்கு ஒளியாக மாறுவதற்கும் அழைக்கப்படுகிறார் என்பதை இந்த வாசகத்தில் ஏசாயா தீர்க்கதரிசி நமக்கு நினைவூட்டுகிறார். கடவுளின் மீட்புத் திட்டம் உலகளாவியது - இது எல்லைகள், மக்கள் மற்றும் தேசங்களுக்கு அப்பாற்பட்டது. இந்த வாசகம் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கப்பணியை

மனிதகுலம் முழுவதற்கும் கடவுளின் மீட்புத் திட்டத்தின் ஒரு முக்கிய பகுதியாகக் காண நம்மை அழைக்கிறது.

**இரண்டாம் வாசகம்:** 1 கொரிந்தியர் 1:1-3

இந்தக் கடிதத்தில், புனித பவுல் கொரிந்தியர்களை பரிசுத்தத்திற்கு அழைக்கப்பட்ட ஒரு சமூகமாக வாழ்த்துகிறார் - தனியாக அல்ல, மாறாக, "எத்திசையிலும் நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தைத் தொழுது கொள்ளும் அனைவருடனும் சேர்ந்து ஒரு சமூகமாக வாழ வாழ்த்துகிறார். "திருச்சபையின் அடையாளம் ஒற்றுமையில் வேரூன்றியுள்ளது: அந்த

ஒற்றுமை ஒரே நம்பிக்கை, ஒரே கடவுள், ஒரே ஆவி. என்கிற பொதுவான அழைப்பை ஒப்புக்கொள்வதில் தொடங்குகிறது.

**நற்செய்தி:** யோவான் 1:29-34

திருமுழுக்கு யோவான் நமதாண்டவர் இயேசுவை "உலகத்தின் பாவத்தை நீக்கும் கடவுளின் ஆட்டுக்குட்டி" என்று அடையாளம் காட்டுகிறார். கிறிஸ்துவால், பாவம் மற்றும் பிரிவினையின் அனைத்து தடைகளும் உடைக்கப்படுகின்றன. புதிய படைப்பு மற்றும் ஒற்றுமையின் அடையாளமாக தூயஆவி அவர் மீது இறங்குகிறது. கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் இந்த ஒற்றுமைக்கு சாட்சி கொடுக்கவும், அனைத்து மனிதகுலத்திற்கும் அமைதியின் மூலமாக அவரை ஏற்கவும் அழைக்கப்படுகிறார்கள்.

**மறையுரைக்கான தியானிப்புகள:**

இன்றைய நற்செய்தி ஒரு கிறிஸ்தவராக இருப்பதன் அர்த்தம் என்ன? என்பதற்கான எளிய ஆனால் ஆழமான பாடத்தை நமக்குத் தருகிறது: திருமுழுக்கு யோவான் ஆற்றின் அருகே நின்று, இயேசுவைச் சுட்டிக்காட்டி, "இதோ, கடவுளின் ஆட்டுக்குட்டி" என்று கூறுகிறார். அந்த சுட்டிக் காட்டல் - தன்னைத் தாண்டிய சுட்டிக்காட்டல் - அதுவே கிறிஸ்தவ ஒன்றிப்பின் இதயம்.

திருச்சபைகள் தன்னைத்தானே சுட்டிக்காட்ட முயலும் போது அது சபைகளை பிரிக்கிறது் அதற்கு மாறாக சபைகள் தங்களைத் தாண்டி கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டும்போது, அது அவைகளை ஒன்றுபடுத்துகிறது.

கிறிஸ்தவ ஒற்றுமை பேச்சுவார்த்தைகள் அல்லது ஆவணங்களில் அல்ல, ஆனால் இதய மாற்றத்தில் தொடங்குகிறது - யோவானைப் போலவே, நாம் ஒவ்வொருவரும் நம் வெற்றியில் அல்ல, கிறிஸ்துவின் மகிமையில் மகிழ்ச்சியைக் காணும்போது கிறித்தவ சபைகளின் ஒற்றுமை மேலோங்குகிறது.

1. தேசங்களுக்கு ஒளியாக இருக்க அழைக்கப்பட்டார். முதல் வாசகத்தில், கடவுளின் ஊழியர் தனக்காக அல்ல, தேசங்களுக்கு ஒளியாக இருக்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்பதை ஏசாயா நமக்கு நினைவூட்டுகிறார். அனைவருக்கும் கடவுளின் மீட்பைக் கொண்டுவருவது என்கிற அன்றைய இஸ்ரவேலிற்கான அழைப்பு இன்றைய திருச்சபைகளின் அழைப்பாக மாறுகிறது. கிறிஸ்தவர்களாகிய நமது ஒற்றுமை ஒரு உள்நோக்கிய திட்டம் சார்ந்தது அல்ல மாறாக அது ஒன்றுபட்ட பணிக்கானது.

பிளவுபட்ட திருச்சபையால் பிளவுபட்ட உலகில் நற்செய்தியை உறுதியுடன் அறிவிக்க முடியாது. ஆனால் வெளித்தோற்றத்தில் மாறுபட்டிருந்தாலும், அன்பால் ஒன்றுபட்ட - திருச்சபையால் அது சாத்தியமாகும். அந்த ஒன்றுபட்ட திருச்சபையே அனைத்து மனித குலத்திற்கும் கடவுளின் கருணையின் ஒளிரும் அடையாளமாக மாறுகிறது.

இந்தியாவில், திருச்சபையின் பணி பரந்துபட்டதாகவும் சிக்கலானதாகவும் உள்ளது. நாம் இந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள் மற்றும் பல நம்பிக்கைகள் மற்றும் மரபுகளைக் கொண்ட மக்களிடையே வாழ்கிறோம். எனவே, கிறிஸ்தவர்களிடையே நமது ஒற்றுமை கடவுளின் அன்பில் காணக்கூடிய ஒற்றுமையின் சாட்சியாக பிரகாசிக்க வேண்டும். நமது ஒற்றுமையின் மூலம்தான் மற்ற மதங்களைச் சேர்ந்த சக சகோதர சகோதரிகள் கிறிஸ்துவின் செய்தி அமைதியைக் கொண்டுவருகிறது என்று நம்ப வழி ஏற்படும்...

2. தூய ஆவியில் நாம் கொண்டுள்ள ஒரே விசுவாசமே நமக்கு வெவ்வேறு கொடைகளைத் தருகிறது, கொரிந்தியர்களுக்கு எழுதும் புனித பவுல், நான் பவுலைச் சேர்ந்தவன்,'' ''நான் அப்பல்லோவைச் சேர்ந்தவன்'' என்று கூறும் குழுக்கள் மற்றும் சபைகளுக்கிடையே உள்ள பிரிவுகள் எப்படி இருக்கும் என்பதை அறிந்திருந்தார் - ''ஆனால் அவர்கள் அனைவரும் கிறிஸ்து இயேசுவில் பரிசுத்தப்படுத்தப்பட்டவர்கள் என்பதை அவர் அவர்களுக்கு நினைவூட்டுகிறார். இன்றைய நமது சொந்த கிறிஸ்தவ வாழ்க்கை நிலைக்கு இது எவ்வளவு ஒத்திருக்கிறது!

நாமும் சில சமயங்களில், ''நான் கத்தோலிக்கன்,'' ''நான் ஆர்த்தடாக்ஸ்,'' ''நான் புராட்டஸ்டன்ட்'' என்று கூறுகிறோம். இந்த பெயர்கள் நமது மரபுகளை விவரிக்கலாம், ஆனால் அவை ஒருபோதும் நம் நம்பிக்கையையும் அன்பின் நோக்கத்தையும் பிரிக்கக்கூடாது.

ஒவ்வொரு திருச்சபைக்கும் ஆவியானவர் வெவ்வேறு கொடைகளைத் தருகிறார் - ஒன்றில் வழிபாட்டு வளம், இன்னொன்றில் மிஷனரி வைராக்கியம், இன்னொன்றில் வார்த்தைக்கு முக்கியத்துவம். இவை அனைத்தும் தேவை.

ஒரு மொசைக் பல கற்களால் ஆனது போல, நமது வேறுபாடுகள் மூலம் கிறிஸ்துவில் ஒன்றுபட்ட திருச்சபையின் அழகு வெளிப்படுகிறது.

3. கடவுளின் ஆட்டுக்குட்டியைப் பாருங்கள் நற்செய்தியில், திருமுழுக்கு யோவான் நமக்கு மனத்தாழ்மையைக் கற்பிக்கிறார். அவர் தனக்காக சீடர்களைச் சேகரித்திருக்கலாம், ஆனால் அதற்கு பதிலாக அவர் அவர்களை இயேசுவிடம் சுட்டிக் காட்டுகிறார். நமது வேறுபாடுகளைப் பாதுகாப்பதை

நிறுத்திவிட்டு, உலகத்தின் பாவத்தை நீக்கும் ஆட்டுக்குட்டியான இயேசுவை நாமும் அவ்வாறே ஒன்றாக அறிவிக்கத் தொடங்கும் போதுதான் உண்மையான கிறிஸ்துவம் தொடங்குகிறது - கிறிஸ்துவின் உடலைப் சிதைக்கும் நமது பாவச் செயல்களான பெருமைபாராட்டுதல், பிறர் மீதான தவறான முன் நிர்மாணங்கள், தவறான புரிதல்கள் மற்றும் அலட்சியங்கள் போன்ற நமது பாவங்கள் உட்பட அனைத்து பாவங்களையும் ஆட்டுக்குட்டியான இயேசு போக்குகிறார்.

நாம் அடிக்கடி ஒருவரையொருவர் காயப்படுத்தியுள்ளோம், ஒருவரையொருவர் மோசமாகப் பேசியுள்ளோம் அல்லது ஒருவரையொருவர் புறக்கணித்துள்ளோம் என்பதை ஒப்புக்கொண்டு அவற்றிலிருந்து மனந்திரும்புதலே ஒற்றுமையை நோக்கிய நமது பயணத்தின் முதல் படியாக உள்ளது. “தூய ஆவி இறங்கி அவர்கள் மீது நிலைத்திருப்பதைக் கண்டேன்.” என யோவான் மேலும் கூறுகின்றார். ஒற்றுமை மனித முயற்சியால் அல்ல, பரிசுத்த ஆவியின் வல்லமையால் வருகிறது. கலாச்சாரம், மொழி, மற்றும் பாரம்பரியத்தின் எல்லைகளுக்கு அப்பால் நம்மை ஒன்றாக இணைப்பது ஆவியானவரே.

4. இந்திய சூழலில் ஒற்றுமை இந்தியாவில், ஒற்றுமைக்கான அழைப்பு என்பது ஆன்மீக மற்றும் சமூக பரிமாணங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. பிரார்த்தனை, உரையாடல் மற்றும் ஒத்துழைப்பு மூலம் கிறிஸ்துவில் நமது ஒற்றுமையை ஆழப்படுத்த ஆன்மீக ரீதியாக, அழைக்கப்படுகிறோம். ஏழைகள், ஒதுக்கப்பட்டவர்கள் மற்றும் அநீதியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சேவை செய்வதில் ஒன்றாக நிற்க சமூகரீதியாக நாம் சவால் விடப்படுகிறோம்.

கல்வி, சுகாதாரம், சுற்றுச்சூழல் அல்லது மனித உரிமைகளுக்காக வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் ஒன்றிணைந்து செயல்படும்போது, கிறிஸ்து விரும்பும் ஒற்றுமையை நாம் ஏற்கனவே வாழ்ந்து வருகிறோம் என்று பொருள்படும்.. வெறுப்பு மற்றும் பயத்தால் உடைந்த உலகில் நமது பொதுவான சமூக சாட்சிய வாழ்வு நம்பிக்கையின் அடையாளமாக மாறுகிறது.

மதங்களுக்கு இடையில், மொழிகளுக்கு இடையில், சமூகங்களுக்கு இடையில் பாலங்களாக இருக்க ஒற்றுமை நம்மை அழைக்கிறது. பிரிவினைகளின் சுவர்களை இயேசு உடைத்தது போல நாமும் அதையே செய்ய அழைக்கப் பட்டுள்ளோம்.

இந்திய கிறிஸ்தவர்களாகிய நமது அழைப்பு கிறிஸ்தவர்கள் என நம்மை தனிமைப்படுத்திக் கொள்ள அல்ல, மாறாக திருசமூகத்திலும், பொது சமூகத்திலும், நமது தேசத்திலும் ஒற்றுமையை உருவாக்குவதாகும்.

*முடிவாக,*

ஒற்றுமை என்பது வேறுபாடுகள் அற்ற நிலைஅல்ல் அதில் குடியிருக்கும் அன்பின் இருப்பு அனைவரும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்று அர்த்தமாக்குவதல்ல, மாறாக அனைவரும் ஒரே இறைவனுக்குச் சொந்தமானவர்களாக இருக்க வேண்டும் என்று ஆக்குவதே ஆகும்.

மறைந்த போப் பிரான்சிஸ் அடிக்கடி கூறியது போல், "ஒற்றுமை என்பது ஒரே மாதிரி இருப்பது அல்ல மாறாக அது வேற்றுமையில் நல்லிணக்கத்தை கடைபிடிப்பதாகும்.

"உலகம் நம்மில் பிளவுபட்ட கிறிஸ்தவத்தை அல்ல, மாறாக கிறிஸ்துவின் அன்பால் எரியும் ஒற்றை இதயத்தைக் காணும் வரை நாம் ஒன்றாக ஜெபிப்போம், ஒன்றாக வேலை செய்வோம், ஒன்றாக நடப்போம். ஆமென்.

**விசுவாசிகளின் மன்றாட்டு:**

**குரு:** அன்பான சகோதரிகளே, சகோதரர்களே, தம்மை விசுவாசிக்கிற அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று கர்த்தராகிய இயேசு ஜெபித்தார். அவருடைய வாக்குறுதியை நம்பி, எல்லா மக்களையும் அன்பில் ஒன்றிணைக்க விரும்பும் பிதாவிடம் நமது ஜெபங்களைக் கொண்டு வருவோம்.

ஒவ்வொரு மன்றாட்டுக்குப் பிறகும் சொல்ல வேண்டிய பதில்:

**ஆண்டவரே, உமது அன்பில் எங்களை ஒன்றாக்குங்கள்.**

1. திருத்தந்தை லியோ, உலகிலுள்ள ஆயர்கள் மற்றும் அனைத்து கிறிஸ்தவ சபைகளின் அனைத்துத் தலைவர்களுக்கும்: அவர்களின் பணிவு மற்றும் உரையாடலின் முன்மாதிரி அனைத்து கிறிஸ்தவர்களையும் முழுமையான ஒற்றுமைக்கு நெருக்கமாக வழிநடத்த இறைவா உம்மை மன்றாடுகிறோம். (பதில்)
2. இந்தியாவில் உள்ள அனைத்து கிறிஸ்தவர்களுக்காகவும்: பல மதங்களை கொண்டுள்ள நமது நாட்டில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தின் சாட்சியாக நாங்கள் கொண்டுள்ள நம்பிக்கையின்

அடிப்படையில் எமது ஒற்றுமை பிரகாசிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம். (பதில்)

3. நமது இந்தியா திருநாட்டின் தலைவர்கள் மத சுதந்திரம், நீதி மற்றும் ஒவ்வொரு சமூகத்திற்கும் உரிய மரியாதையை ஊக்குவித்து அதனால் நாட்டில் ஒற்றுமை மற்றும் அமைதி நிலவ உதவிடும்படி இறைவா உம்மை மன்றாடுகிறோம். (பதில்)

4. உலகில் பாகுபாடு, வன்முறை அல்லது துன்புறுத்தலால் அவதிப்படுபவர்களுக்காகவும், நீவிர் தாமே, அவர்களின் காயங்களை குணப்படுத்தி, மன்னித்து, நல்லிணக்கத்தில் நம்பிக்கை கொள்ளவும் பலம் அளிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம். (பதில்)

5. அனைத்து கிறிஸ்தவ திருச்சபைகளின் இளைஞர்களும் நட்புணர்வை கட்டியெழுப்புபவர்களாகவும், சாதி, மொழி மற்றும் மதப்பிரிவின் தடைகளை உடைப்பவர்களாகவும் மாற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம். (பதில்)

6. தொடர்ந்து நடைபெறும் கிறிஸ்தவ இயக்கங்கள் மற்றும் அவைகளின் உரையாடல்கள் ஆவியின் வழிகாட்டுதலின் மூலம் ஆழமான புரிதல் மற்றும் ஒத்துழைப்பில் பலனைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம். (பதில்)

7. இங்கு கூடியிருக்கும் நம் ஒவ்வொருவருக்கும் இந்த கொண்டாட்டம் கிறிஸ்துவின் மீதான நமது அன்பையும், கடவுளின் ஒரே குடும்பமாக ஒன்றாக வேலை செய்வதற்கான நமது விருப்பத்தையும் புதுப்பிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**குரு:** எங்கள் பிதாவாகிய கடவுளே, நீங்கள் எங்களை கிறிஸ்துவில் ஒரே உடலாக்கியுள்ளீர்கள். உமது அனைத்து குழந்தைகளின் ஒற்றுமைக்காக நாங்கள் செய்யும் எங்கள் மன்றாட்டுக்களை கேட்டருளும். எங்களை பணிவானவர்களாகவும், நல்லிணக்கத்தின் உண்மையுள்ள ஊழியர்களாகவும் ஆக்குங்கள், இதனால் உலகம் உங்கள் அன்பில் நம்பிக்கை கொள்ளும். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துவின் மூலம். ......

**அனைவரும்:** ஆமென்.

*(கிறிஸ்தவ ஒற்றுமைக்கான பிரார்த்தனைகளை ரோமன் மிஸ்ஸல், பக்கங்கள் 1113 - 1118 இல் காணலாம்).*

# நாள் – 1

# நமது அழைப்பு

*இன்றைய இறைவார்த்தை:*

“ஆண்டவர் பொருட்டு கைதியாக இருக்கும்நான்உங்களைக் கெஞ்சிக்கேட்கிறேன். நீங்கள் பெற்றுக் கொண்ட அழைப்பிற்கு ஏற்ப வாழுங்கள்.” - எபேசியர் 4:1

*கூடுதல் இறைவார்த்தைகள்:*

மீக்கா 6:6-8

திபா133

மாற்கு 3:13-15

*மறையுரை:*

எபேசியர் 4:1-இல் புனித பவுல், “நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பிற்கு ஏற்ப” வாழ்வதின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். இது கிறிஸ்தவ சமுதாயத்தின் ஒறுமைப்பாட்டுடன் ஆழமாக இணைக்கப்பட்டுள்ளது. பிளவுபட்ட சமுதாயத்தின் நடுவில், இறைவார்த்தை நம்பிக்கையாளர்களைத் தடைகளைக் கடந்து, ஒருமைப்பாட்டை வளர்க்க அழைக்கிறது. இந்த இறை அழைப்பு, நம்பிக்கையாளர்களின் கூட்டுறவினுள் இறைவனுடைய மதிப்பீடுகளை வெளிப்படுத்த அழைக்கிறது. நமது குணநலன்கள் இந்த அழைப்புடன் ஒன்றிணையும் போது, நாம் கிறிஸ்துவின் நற்செய்திகளை பிரதிபலிப்பதோடு மட்டுமல்லாமல், கிறிஸ்துவின் உடலின் ஒருமைப்பாட்டிற்கும் மற்றும் வளர்ச்சிக்கும் பங்களிக்கிறோம். இந்த அழைப்பை உணர்ந்து, ஏற்றுக்கொள்வது, கிறித்தவ சமுதாயத்தின் உண்மையான மதிப்பீடுகளில் வாழ்வதற்கும், ஒற்றுமையான, ஆதரவான நட்புறவை வளர்ப்பதற்கும் அவசியமாகிறது.

*சிந்தனைக் கேள்வி:*

எபேசியர் 4:1-இல் குறிப்பிடப்பட்டுள்ள “நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பை” பற்றி சிந்திப்பது, நமது உள்ளூர் மற்றும் பிற திருஅவைச் சமூகங்களில் ஒருமைப்பாட்டிற்கு நமது பணிகளால் தூண்டுவது எப்படி?

மன்றாடுவோம்!

ஒளியாம் இறைவா!

நீர் எங்களை இருளிலிருந்து உம்முடைய ஒளிக்குள் அழைத்துள்ளீர். உமது அழைப்பிற்கு எமது பதிலிறுப்பாக நல்லிணக்கத்தைத் தேடவும், உமது ஒளியை உலகில் எடுத்துச் செல்லவும் எம்மை வழிநடத்தும். - ஆமென்.

# நாள் – 2

# அன்பால் ஒருவரை ஒருவர் தாங்குவோம்!

*இன்றைய இறைவார்த்தை:*

“முழு மனத்தாழ்மையோடும் கனிவோடும் பொறுமையோடும் ஒருவரையொருவர் அன்புடன் தாங்கிக்கொள்ளுங்கள்.” - எபேசியர் 4:2

*கூடுதல் இறைவார்த்தைகள்:*

செக்கரியா 7:8-10

திபா 25:6-10

லூக்கா 10:30-36

*மறையுரை:*

புனித பவுல், கிறிஸ்தவ அழைப்புக்குத் தகுந்தவாறு வாழ்வதற்கான ஆழமான சமூக வழிகாட்டுதலை வழங்குகிறார். அவர் நம்பிக்கையாளர்களை “முழு மனத்தாழ்மையோடும் கனிவோடும் பொறுமையோடும் ஒருவரையொருவர் அன்புடன் தாங்கிக் கொள்ளுங்கள்” என்று அழைக்கிறார் (எபேசியர் 4:2). இந்த இறை அழைப்பு தனிப்பட்ட பயணம் மட்டுமல்ல, அது பிறருடனான நம் உறவுகளில் தெளிவாக வெளிப்படுகிறது. புனித பவுல் வலியுறுத்தும் நான்கு நற்குணங்கள் - தாழ்ச்சி, கனிவு, மென்மை, சகிப்புத்தன்மை - இவை அன்பான உறவுகளை வளர்க்க மிகவும் அவசியமானவை. இந்த நற்குணங்களை உடையவர்களாக இருப்பது, உண்மையான தாழ்ச்சியுடன் பிறரை அணுகுவதையும், எங்கள் பொறுமையைச் சோதிப்பவர்களுக்குக் கூட கனிவைக் காட்டுவதையும், எங்களைத் துன்புறுத்துவோருடன் சகிப்புத்தன்மையுடன் நடப்பதையும் குறிக்கிறது. மிக ஆழமாக, இது “ஒருவரை ஒருவர் சகித்துக் கொள்ளுதல்” என்ற அழைப்பை, எங்கள் வேறுபாடுகளைக் கடந்து, எல்லா உலக வேற்றுமைகளையும் தாண்டி, இறைவனுடைய அளவற்ற இரக்கத்தின் அருளை வெளிப்படுத்தும் அன்பை பிரதிபலிக்கிறது.

*சிந்தனைக் கேள்வி :*

எபேசியர் எழுதியுள்ள தாழ்ச்சி, கனிவு, மென்மை, சகிப்புத்தன்மை ஆகிய நற்குணங்கள், நம்பிக்கையாளர்களாகிய நம்மை உள்ளூர் மற்றும் பிற கிறிஸ்தவ சமுதாயங்களில் பிளவுகளைத் தாண்டி, ஒருமைப்பாட்டை அடைய உதவுவது எப்படி?

மன்றாடுவோம்!

ஆண்டவராகிய இயேசுவே! நீர் எங்களை தாழ்ச்சியிலும் கனிவிலும், ஒருவரை ஒருவர் பொறுமையுடன் நடக்ககற்றுக் கொடுத்தீர். நீர் எங்கள் பாதையில் ஒளி ஏற்றியுள்ளீர் அந்த ஒளி எங்களை ஒறுமைப்பாட்டின் வழியில் நடத்துவதாக. சமுதாயங்களைபிரிக்கும் பிளவுகளாலும் பாகுபாடுகளாலும் உருவான காயங்களை குணப்படுத்த எமக்கு உதவுவதாக. - ஆமென்.

# நாள் – 3
# அமைதியின் பிணைப்பு

*இன்றைய இறைவார்த்தை:*

“அமைதியுடன் இணைந்து வாழ்ந்து, தூய ஆவி அருளும் ஒருமைப்பாட்டைக் காத்துக் கொள்ள முழு முயற்சி செய்யுங்கள்.” - எபேசியர் 4:3

*கூடுதல் இறைவார்த்தைகள்:*

எசாயா 11:6-9

திபா 86:8-13

யோவான் 14:27-31

*மறையுரை:*

திருஅவையின் ஒருமைப்பாட்டை நிலை நிறுத்துவதில் அமைதி மிக முக்கியமானது. எபேசியர் 4:3-இல் “அமைதியின் பிணைப்பு” என்பது கிறிஸ்தவ சமுதாயத்தின் ஒருமைப்பாட்டை இணைப்பது மட்டுமல்ல, அதை நிலை நிறுத்தும் உயிருள்ள, செயலில் இருக்கும் ஒரு அடிப்படைத் தத்துவமாகும். அமைதியின் அரசராகிய கிறிஸ்து (எசாயா 9:6) அமைதியையும் நல்லிணக்கத்தையும் அறிவித்தார். அமைதி ஆவியின் கனியாகும் (கலாத்தியர் 5:22) அது ஒரு கொடையும், ஆவியின் செயலில் விளையும் பலனும் ஆகும். “அமைதியின் பிணைப்பு” என்பது திருஅவையின் ஒற்றுமையை நிலை நிறுத்தும் செயலில் இருக்கும் சக்தி பின்னணி அல்லது கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், பல்வேறு உறுப்பினர்களை ஒன்றாக இணைக்கிறது. அமைதி அர்த்தமுள்ள உறவுகளை வளர்க்கிறது நம்பிக்கையாளர்கள் ஒற்றுமையுடன் பழகவும், ஒருவரை ஒருவர் எளிதில் மன்னிக்கவும் உதவுகிறது. புனித பவுல் உண்மையான, ஒன்றுபட்ட, தொடர்ச்சியான அமைதி பற்றுதலைக் கோருகிறது என்பதை

வலியுறுத்துகிறார். அது உறுப்பினர்களிடையே அமைதியைச் செயலில் வளர்க்கவும் ஊக்குவிக்கவும் தேவைப்படுகிறது.

*சிந்தனைக் கேள்வி*

அமைதி ஆவியின் கனியாகும் என்று புனித பவுல் அறிவித்தது, நமது அன்றாட உறவுகள் மற்றும் தொடர்புகளில், குறிப்பாக நல்லிணக்கம் அல்லது மன்னிப்பு தேவைப்படும் இடங்களில், எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகிறது?

**மன்றாடுவோம்!**

ஆண்டவராகிய இயேசுவே!

நீர்அமைதியின் அரசர்.

எம்மிடமும், எமது பாவ உலகிலும்

அமைதியின் பிணைப்பை வலுப்படுத்துவீராக.

போரிடுவோரின் இதயங்களை மாற்றிடுவீராக.

போரால் பாதிக்கப்பட்டவர்களின் காயங்களைத் தொட்டு ஆற்றுவீராக.

அர்மேனியா மற்றும் ஆர்ட்சாக் மக்களுக்காகவும்,

உலகம் முழுவதும் உள்ள அவர்களின் உறவுகளுக்காகவும்

நாங்கள் வேண்டுகிறோம்.

உமது அன்பின் ஒளி, உலகின் இருள் நிறைந்த இடங்களில் ஒளிர்வதாக. அனைத்து மக்களும் நீதியுடன் அமைதியில் வாழும் நாளை விரைவில் கொணர்ந்தருளும். - ஆமென்.

# நாள் – 4
# ஒரே எதிர்நோக்கிற்காக அழைக்கப்பட்டவர்கள்

*இன்றைய இறைவார்த்தை:*

"நீங்கள் ஒரே எதிர்நோக்கு கொண்டு வாழ அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். ஒரே எதிர்நோக்கு இருப்பது போல, உடலும் ஒன்றே தூய ஆவியும் ஒன்றே."
- எபேசியர் 4:4

*கூடுதல் இறைவார்த்தைகள்:*

இணைச்சட்டம் 6:4-9
திபா 24:1-6
யோவான் 17:20-26

*மறையுரை:*

எபேசியர் 4:4-இல் புனித பவுல் உலகமெங்கும் உள்ள திருஅவையை இணைக்கும் ஆழ்ந்த ஒற்றுமையை வலியுறுத்துகிறார். இந்த ஒற்றுமை ஒரே ஆவியிலும் ஒரே நம்பிக்கையிலும் வேரூன்றியுள்ளது. பெந்தெகொஸ்தே நாளில் தூயஆவி திருஅவையின் உலகளாவிய பணியை பற்றியெரியச் செய்தார். அதே ஆவி இன்றும் நம்மை வலுப்படுத்தி, நமது ஒருமித்த பணியை வளர்க்கிறார் தேசிய, கலாச்சார எல்லைகளைத் தாண்டி, உலகளாவிய திருஅவையை உருவாக்குகிறார். இயேசு கிறிஸ்துவின் மூலம் கிடைக்கும் மீட்பின் நம்பிக்கையே இந்த ஒற்றுமையின் அடித்தளம். இது பல்வேறு மக்களை ஒரே தூய, கத்தோலிக்க, அப்போஸ்தலிக்க திருஅவையாக இணைக்கிறது. கிறிஸ்தவர்களாகிய நாம், ஒரே நம்பிக்கையாலும் ஒரே ஆவியாலும் வரையறுக்கப்படுகிறோம் அதில் நாமே புனிதமாக்கப்பட்டு புதுப்பிக்கப்படுகிறோம். இந்த ஒற்றுமை வெறும் கருத்தாக அல்லாமல், வாழ்வில் வெளிப்பட வேண்டும் என்பதே நம் பணி. அதன் மூலம் நமது வரையறுக்கப்பட்ட பணி மற்றும் அன்பை வலுப்படுத்த வேண்டும்.

*சிந்தனைக் கேள்வி:*

ஒரே அழைப்பை ஏற்றுக்கொள்வதில், நம் தனித்துவமான அடையாளங்களையும் பாரம்பரியங்களையும் காக்கும் வகையில், திருஅவையோ சமூகமோ எவ்வாறு செயல்பட முடியும்?

*மன்றாடுவோம்!*

இயேசுவே, நீர் எங்களை
எமது பல்வேறு தனித்துவங்களாலும்
உமது குடும்பமாகவும் திருஅவையாகவும் ஒன்றிணைத்திருக்கிறீர்.
இவ்வுலகில் அவ நம்பிக்கைபெருகியும்
இதயங்கள் காயமடைந்துள்ளசூழல்களில்,
தூயஆவியின் உலகை மாற்றும் செயலில்
எங்கள் நம்பிக்கையைப் புதுப்பிக்குமாறு வேண்டுகிறோம்.
இந்த நம்பிக்கையை எங்கும்,
அனைவரிடமும் பரப்ப எங்களைத் தூண்டுவீராக.
நீரே பாவ இருளை அகற்றும் உண்மையான ஒளி
உமது நிலையான அன்பின் மகிழ்ச்சியும் நம்பிக்கையும்
எங்கள் இதயங்களில் ஒளிரச் செய்வீராக! - ஆமென்.

# நாள் – 5
# ஒரே நம்பிக்கை, ஒரே திருமுழுக்கு

*இன்றைய இறைவார்த்தை:*

"ஆண்டவர் ஒருவரே நாம் கொண்டுள்ள நம்பிக்கை ஒன்றே திருமுழுக்கு ஒன்றே." - எபேசியர் 4:5

*கூடுதல் இறைவார்த்தைகள்:*

செக்கரியா 14:6-9

திபா 100

மத்தேயு 28:16-20

*மறையுரை:*

எபேசியர் 4:5-இல் புனித பவுல், திருமுழுக்கு கிறிஸ்தவ ஒன்றிப்பை உறுதிப்படுத்துவதாக வலியுறுத்துகிறார். திருமுழுக்கு ஒருவரை திருஅவையின் ஒன்றிப்பிற்குள் அழைத்து, ஒரே ஆண்டவருக்கான அவர்களின் ஒன்றுபட்டஅர்ப்பணிப்பை உறுதிப்படுத்துகிறது. நாம் ஆண்டவரின் உடலில் ஒன்றாக இருப்பதால், திருமுழுக்கு திருஅவையின் கூட்டு அடையாளத்தை உருவாக்குகிறது.

இந்த திருவருட்சாதனம் உறுப்பினர்கள் பல்வேறு பின்னணிகளில் இருந்து வந்தாலும், அவர்களின் நம்பிக்கையும் திருமுழுக்கும் எல்லா பிரிவுகளையும் தாண்டி அவர்களை ஒன்றிணைக்கிறது என்பதை நினைவூட்டுகிறது. இந்த ஒருமித்த கூறுகளில் கவனம் செலுத்துவதன் மூலம், திருஅவை தனது பன்முகத்தன்மையை கொண்டாடி, உறுதியான ஒன்றிப்பில் நிலைத்திருக்க முடியும். இது, கிறிஸ்துவில் உள்ள நம் பன்முக அடையாளத்தை, வேறுபாடுகளை களைந்து முக்கியத்துவம் கொடுக்கும்படி அறைகூவல்விடுக்கிறது அனைத்து கிறிஸ்தவர்களையும் இணைக்கும் உறவை வலுப்படுத்துகிறது.

*சிந்தனைக்கேள்வி:*

நமது பல்வேறு சமூகங்கள், இயேசு கிறிஸ்துவில் உள்ள ஒன்றுபட்ட நம்பிக்கை, திருமுழுக்கு மூலம் உருவான ஒன்றிப்பை கொண்டாட, எத்தகைய கூட்டுப் பணிகளை மேற்கொள்ள முடியும்?

மன்றாடுவோம்!

இறைவனின்ஆவியே, உண்மை இறைவனே!
யோர்தான் ஆற்றில் இறங்கினீர், மேல்மாடியிலும் இறங்கினீர்
புனித திருமுழுக்கின் மூலம் எங்களை ஒளிரச்செய்தீர்.
நாங்கள் வானத்திற்கும் உமக்கும் எதிராக பாவம் செய்தோம்
சீடர்களை தீநாவுகளால் சுட்டெரித்தது போல்,
உமது தெய்வீகத் தீயால் எங்களை மீண்டும் சுட்டெரிக்கச் செய்வீராக.
உமது படைப்புகள்மேல், குறிப்பாக எங்கள் மேல் உமது
கருணையை காட்டுவீராக. ஆமென்.

(செய்தி: புனித நெர்செஸ் கிரேசியஸ் - மறுவடிவம்)

# ாள் – 6
# ஒரே ஆண்டவரும் தந்தையும்

*இன்றைய இறைவார்த்தை:*

"எல்லாருக்கும் கடவுளும் தந்தையுமானவர் ஒருவரே அவர் எல்லாருக்கும் மேலானவர் எல்லார் மூலமாகவும் செயலாற்றுபவர் எல்லாருக்குள்ளும் இருப்பவர்." - எபேசியர் 4:6

*கூடுதல் இறைவார்த்தைகள்:*

1 அரசர்கள் 8:56-60

திபா 148:7-13

மத்தேயு 5:44-48

*மறையுரை:*

எபேசியர் 4:6-இல் புனித பவுல், கடவுளின் ஆழ்ந்த ஒருமைப்பாட்டை வலியுறுத்துகிறார். அவர் "எல்லாருக்கும் மேலாகவும், எல்லார் மூலமாகவும், எல்லாருக்குள்ளும்" இருப்பவர் என்று அறிவிக்கிறார். கடவுள் ஒரே நேரத்தில் எல்லாருக்கும் மேலாகவும், எல்லாருக்குள்ளும் செயலில் இருப்பவரும் ஆவார். இந்த அடிப்படை உண்மை, திருஅவையை ஒருமைப்பாட்டில் வாழ அழைக்கிறது ஒரே உண்மையான கடவுளைப் பற்றிய ஒன்றித்த

நம்பிக்கையில் வேரூன்றியதாக. “எல்லாம்” என்பது, இறைவனின் சாயலில் படைக்கப்பட்ட ஒவ்வொருவரும் அவருடைய அதிகாரத்தின் கீழ் இருப்பதை குறிக்கிறது. ஒரே இறைவனை வணங்குவது, கிறிஸ்தவர்களுக்கிடையே வலுவான ஒன்றிப்பு உறவை உருவாக்குகிறது. குடும்ப உறுப்பினர்கள் தங்கள் பெற்றோரின் அன்பில் மேலான நிலையை அடைவதுபோல், கிறிஸ்தவர்கள் ஒரே தந்தைக்கான இறை உறவில் ஒன்றுபட அழைக்கப்படுகிறார்கள்.

*சிந்தனைக் கேள்வி:*

அனைவருக்கும் அன்பும் பராமரிப்பும் காட்டும் தந்தையாகிய கடவுளின் உருவத்தை, உலகில் ஒருமைப்பாடான கிறிஸ்துவின் சாட்சிய வாழ்வை மேம்படுத்துவதற்காக எவ்வாறு நமது திருஅவையின் பணி மற்றும் பணிகளில் ஒருங்கிணைக்கலாம்?

மன்றாடுவோம்!

அன்பானதந்தையே!

நாங்கள் நம்பிக்கையுடன் ஏற்றுக்கொண்டு, உம்மை வணங்குகிறோம்,

ஏனெனில் நீர் உமது மகனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் விண்ணுலகில் வார்த்தைகளுக்கு மேற்பட்டவராகவும்

இம்மண்ணுலகில் அறிவுக்கு மேற்பட்டவராகவும் இருக்கிறீர்,

உமது மென்மையான பராமரிப்பில்,

எல்லாவற்றிற்கும் துவக்கமும் முடிவுமாகவும் இருக்கின்றீர்.

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவிக்கும் என்றென்றும் மகிமை உண்டாகுக.
- ஆமென்.

திரு. நாரேக் கிரிகோரி (மறுவடிவம்)

# நாள் – 7

# திருமுழுக்கு – கடவுள் அளித்த கொடை

*இன்றைய இறைவார்த்தை:*

“கிறிஸ்து கொடுக்க விரும்பும் அளவுக்கேற்ப நம் ஒவ்வொருவருக்கும் அருள் அளிக்கப்பட்டுள்ளது.” - எபேசியர் 4:7

*கூடுதல் இறைவார்த்தைகள்:*

எரேமியா 1:4-9

திபா 131

மத்தேயு 25:14-18

*மறையுரை:*

திருஅவைகளும் உள்ளூர் சமூகங்களும், இறைவனால் அளிக்கப்பட்ட ஒருமைப்பாட்டில் பன்முகத்தன்மையுடன் இருக்கின்றன. கிறிஸ்து வழங்கிய அருள், கடவுளின் அரசை கட்டியெழுப்புகிறது. இந்த ஆவிக்குரிய கொடைகள் ஒரே கடவுளால், ஒரே திருமுழுக்கில், ஒரே நோக்கத்திற்காக அளிக்கப்படுகின்றன.

*வேற்றுமையில் ஒற்றுமை:*

இதுவே தூய ஆவியின் இயக்கத்தில், கிறிஸ்துவை மையமாகக் கொண்ட திருஅவையின் தனித்துவமான வளமையும் ஆற்றலும் ஆகும்.

*சிந்தனைக் கேள்வி:*

கொடைகளின் பல்வேறு செயல்பாடுகள் எதிர்ப்புக்கும் போட்டிக்கும் காரணமல்ல, ஒருவர் ஒருவரின் வலிமைக்கும் பகிர்வுக்கும் காரணம் என்பதை ஏற்றுக்கொண்டால், நமது உறவுகள் எவ்வாறு மாறும்?

**மன்றாடுவோம்!**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, உமது உடலான திருஅவையை கட்டியெழுப்புவதற்காக ஒரே திருமுழுக்கால் தூயஆவியின் வழியாகநீர் எமக்குஉன்னதஅருளையும் பல்வேறு கொடைகளையும் அளித்திருக்கிறீர் அவற்றின் பன்முகசெழிப்பை முழுமையாக மதிக்கவும், நற்செய்திஅறிவிப்பதற்காக அவற்றைப் பயன்படுத்தவும்,

எங்களைத் தயார்படுத்தும்.

இவற்றை உமது பெயரால் வேண்டுகிறோம். - ஆமென்.

# நாள் – 8
# கிறிஸ்துவில் வளர்ச்சி

*இன்றைய இறைவார்த்தை:*

"நாம் எல்லாரும் இறை மகனைப் பற்றிய அறிவிலும் நம்பிக்கையிலும் ஒருமைப்பாட்டை அடைவோம். கிறிஸ்துவிடம் காணப்பட்ட நிறைவைப் பெறுமளவுக்கு நாம் முதிர்ச்சியடைவோம்." - எபேசியர் 4:13

*கூடுதல் இறைவார்த்தைகள்:*

நீதிமொழிகள் 9:10-12

திபா 119:97-104

யோவான் 17:3-7

*மறையுரை:*

எபேசியர் 4:13-இல் புனித பவுல், கிறிஸ்துவின் உடலின் பார்வையை மூன்று முக்கிய கூறுகளில் சுருக்குகிறார்: நம்பிக்கையில் ஒருமை, அறிவில் வளர்ச்சி, கிறிஸ்துவில் நிறைவு.

வளர்ச்சி என்பது இயேசு கிறிஸ்துவைப் பற்றிய ஆழமான அறிவின் மூலம் வருகிறது. இது வாழ்க்கையை மாற்றும் அறிவு அது நம் மனதைப் புதுப்பித்து, வெறும் அறிவாற்றலாக அல்லாமல், செயல்களில் வெளிப்படச் செய்கிறது. நாம் அவரை மேன்மேலும் அறிந்து கொள்ளும்போது, அவரைப் போலவே ஆகிறோம்.

இந்த அறிவைப் பெற, ஒருவர் அவரது நற்செய்திகளைப் படித்து, அவற்றிற்கு அனுதினம் கீழ்படிந்து வாழ வேண்டும். "கிறிஸ்துவின் முழுமையான நிலை" என்பது கிறிஸ்தவ வளர்ச்சியின் நோக்கம். அதாவது, இயேசுவைப் போல எல்லாவற்றிலும் மாறுவது: அவர் அன்பு செய்தபடி அன்பு செய்வது, அவர் சேவை செய்தபடி சேவை செய்வது, அவரது குணத்தை பிரதிபலிப்பது.

நாம் நமது ஆன்மிகப் பயணத்தை திறனாய்வு செய்ய அழைக்கப்படுகிறோம் ஒருவருக்கொருவர் ஒருமைப்பாட்டைத் தேடவும், இறைமகனைப் பற்றிய அறிவில் வளரவும், அவரது நிறைவை நம்முள் அடைய முயற்சிக்கவும்அழைக்கப்பட்டுள்ளோம்.

*சிந்தனைக் கேள்வி:*

நாம் கிறிஸ்துவைப் பற்றிய அறிவில் எவ்வாறு வளர்கிறோம், அந்த அறிவு எவ்வாறுநமது செயல்கள், சிந்தனைகள், உறவுகளை வடிவமைக்க அனுமதிக்கிறோம்?

*மன்றாடுவோம்:*

ஓ இயேசுவே, உலகின் உண்மையான ஒளியே!

என் ஆன்மா உமது மகிமையின் ஒளியை, என் அழைப்பின் நாளில் மகிழ்ச்சியுடன் காணத் தகுதியாக்குவீராக. நேர்மையாளர்களின் இல்லத்தில், உமது மகத்தான வருகையின் நாள்வரை நன்மையானதை எதிர்நோக்குடன் பெற காத்திருக்கச் செய்தருளும்.

உமது படைப்புகள்மீதும், பெரும்பாவியான என்மீதும் கருணை காட்டியருளும்.

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவிக்கும் என்றென்றும் மகிமை உண்டாகுக. - ஆமென்.

# PRAYER FOR THESE PRAYER POINTS

"TABOR : 2025" அனைத்து கிறிஸ்தவ ஒன்றிணைப்பு ஜுபிலி உச்சி மாநாடு இலக்குகளும் தீர்மானங்களும்.

1. 2033 நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பாடுகளின் உயர்வின் 2000 ஆண்டு நிறைவினை நெருங்கி வரும் வேளையில் இந்திய கிறிஸ்தவர்களாகிய நாம், திருச் சமூகங்களாக எழுந்து பிரகாசிப்போம்.

2. இயேசுவின் உயிர்ப்பு தனிமனித கிறிஸ்துவ வாழ்வில், விசுவசிப்பதை ஆழ்ந்து, அறிந்து, உணர்ந்து அறிக்கையிடவும், அதை புரிந்து, தேர்ந்து, தெளிந்து, அன்றாட வாழ்வில் செயலில் காட்டவும், இவ்வாறு என் கிறிஸ்தவ சாட்சிய வாழ்வாலும், சகோதர அன்பு பணியாலும் கிறிஸ்துவின் நற்செய்தி நறுமணத்தை செல்லும் இடமெல்லாம் பரப்புவேன்.

3. என் குடும்பம் கிறிஸ்து என்னும் பாறை மேல் கட்டப்பட்ட இல்லமாக உயிர்க்கும். இவ்வுயிர்ப்பு கணவன் மனைவி அன்பு வாழ்விலும், பெற்றோர் பிள்ளைகள் பொறுப்பு வாழ்விலும், பொது சமூக முன்னேற்ற பங்கேற்புகளிலும், திருச்சமூகம் சார்ந்த அப்போஸ்தல பணிகளிலும் பிரதிபலிக்க செய்வேன்.

4. என் திருச்சமூகத்தில் ஜாதி, வரதட்சணை, லஞ்சம், ஊழல் போன்ற பிடிகளில் இருந்து விலகி அன்பு மொழி பேசி, எதிர்ப்படும் சவால்களை தூயஆவியின் ஆற்றலால் சந்தித்து தனித்துவமிக்க கிறிஸ்துவ சமூகமாக வாழ உறுதியளிப்போம்.

5. கிறிஸ்தவ விழும்பியங்களான சமத்துவம், சகோதரத்துவம், சமூக நீதி, சுதந்திரம், மனமாற்றம் தேவைப்படுபவருக்காக உழைக்கும் தோழமை சக்திகளை அடையாளம் கண்டு அவர்களோடு இணைந்து பயணிக்க உறுதியளிப்போம்.

6. கிறிஸ்தவ ஒன்றிப்பு என்பது கூடி ஜெபிப்பதற்கான கூட்டமாக மட்டும் இருந்துவிடாமல், ஒட்டுமொத்த கிறிஸ்தவர்களுடைய சமூக, பொருளாதார, ஆன்மீக, கலாச்சார மற்றும் அரசியல் கூறுகளை ஆய்வுக்கு உட்படுத்தி, தேவையான அனைத்து நடவடிக்கைக்கும் விசுவாசத்துடன் உறுதி அளிப்போம்.

TABOR 2026-2033

# TABOR 2026-2033

## AN ECUMENICAL JUBILEE SUMMIT

## Christianity: Yesterday, Today and Tomorrow

